**O.S.No.52/2021**

பி.வா.சா.1, திரு. மங்களம்
நாள் : 05.11.2025 நேரம் : 11.20AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)வாதி என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது சொத்தில் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது சொத்து என்று நான் கூறுவது யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் 2019ம் ஆண்டு வெள்ளையம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். எனது சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 1 1/2 சென்ட் மேற்படி சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால் தெரியாது. எனது கிரைய சொத்தை அடையாளம் காண்பிக்க கல் ஊன்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 கற்களும் நான் கிரையம் பெறும் முன்னரே ஊன்றப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் கிரையம் பெறும் முன்னர் கிரைய சொத்தை அளவீடு செய்ய வருவாய் துறையினர் மூலம் முயற்சி எடுத்தேனா என்றால் எடுத்தேன்.

2)நான் எப்போது எந்த வருடம் எனது கிரைய சொத்தை அளவீடு செய்தேன் என்றால் வருடம் நினைவில் இல்லை, ஆனால் கிரையம் பெற்ற பின்னர் அளவீடு செய்தேன். எனது கிரைய சொத்திற்கு செல்வதற்கு கிழமேல் மற்றும் தென்வடலில் பாதை உள்ளது என்றால் சரியல்ல. கிழக்கே மட்டும் தான் பாதை உள்ளது, தென்வடலில் பாதை இல்லை. எனது கிரைய சொத்திற்கு கிழக்கு பகுதியில் முளைப்பாரி திண்ணை உள்ளது என்றால் சரிதான். முளைப்பாரி திண்ணையிலிருந்து மேற்கு நோக்கி வரும் தார்சாலை நேரடியாக எனது இடத்தை வந்து அடையும் என்றால் எனது மற்றும் வாதியின் பிளாட்டில் வந்து அடையும். மேற்படி எனது இடத்தை வந்து அடைந்த பின்னர் மேற்படி தார்சாலை தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். மேற்படி தெற்கு நோக்கி செல்லும் சாலை எங்கு போய் அடைகிறது என்றால் குளத்தில் போய் சேர்கிறது. அதே போல் கிழக்கே உள்ள பாதை எங்கு செல்கிறது என்றால் ஊரை

சுற்றிவிட்டு குளத்து கரையில் தான் போய் சேர்கிறது. மேற்படி இரு பாதைகளும் குளத்து கரையில் சென்று அடைவதால் அந்த இரு பாதைகள் வழியாக எனது இடத்திற்கு சென்றடையலாம் என்றால் சரியல்ல. கிழக்கே உள்ள பாதை வழியாக தான் வரமுடியும்.

3)தற்போது தாவா சொத்தில் உள்ள கற்களை எப்போது ஊன்றினேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் வாதி பிரச்சனை செய்ததால் ஏற்கனவே இருந்த சர்வே கற்களை மாற்றிவிட்டு 3 அடி உயரத்திற்கு கல் ஊன்றினேன். மேற்படி கல் அளந்து ஊன்றப்பட்டதா என்றால் சர்வேயர் மற்றும் போலீஸ் முன்னிலையில் அளந்து ஊன்றப்பட்டது. வாதி தற்போது கல் ஊன்றப்பட்டுள்ள எனது கிரைய சொத்திற்குள் பாதை உள்ளது என்று கோருகிறாரா அல்லது அதற்கு வெளியே கோருகிறாரா என்றால் எனது சொத்தில் தான் பாதை கேட்கிறார். வாதி எனது கிரைய சொத்தில் பாதை கேட்கவில்லை என்றாலும், தாவா சொத்திற்கு தெற்கே உள்ள பாதையை வாதி மற்றும் பிரதிவாதி புழங்குவது வாதிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது சொத்திற்கு தெற்கே பாதை இல்லை.

4)நான் சர்வே செய்து கல் ஊன்றியுள்ள எனது கிரைய சொத்தில் வாதி இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அனுபவத்திற்கு இடையூறு செய்கிறார். வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவலரை வைத்து கிராம கணக்கின் அடிப்படையில் தாவா சொத்திற்கு தென்புறம் பாதை உள்ளது என நிரூபணம் செய்வது எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் தெற்கு பக்கம் பாதை இல்லாததால் அதை நிரூபணம் செய்ய இயலாது. எனது அனுபவத்தை இடையூறு செய்வதாக வாதி மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தான் என்மீது புகார் கொடுத்துள்ளார். எனது கிரைய சொத்தான 1 1/2 சென்ட் இடமும், தற்போது காலிமனையாக தான் உள்ளது என்றால் சரிதான். வைக்கோல் படப்பு வைத்தும் மிளகாய் கன்று பாவுவது அனுபவம் செய்து வருகிறேன். மேற்படி நான் கூறுவது போல எனது சொத்தில் வைக்கோல் படப்பு மற்றும் மிளகாய் கன்று பாவவில்லை என்றாலும் எனது சொத்திற்கு தெற்கே

உள்ள சாலையில் தான் வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் மேற்படி சாலையில் வைக்கோல் படப்பு வைத்தால் தான் வாதி என்மீது புகார் கொடுத்து போலிசார் அறிவுறுத்தலின் பேரில் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றினேன் என்றால் சரியல்ல. எனது கிரைய சொத்திற்கும் தெற்கு பக்கம் உள்ள சாலை வாதி மற்றும் எனக்கும், கிராம மக்களுக்கும் பொதுவான சாலை என்றால் சரியல்ல. கிழக்கு பக்கம் தான் சாலை உள்ளது.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.50 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.11.05 12:24:01 +0530